**OS.NO: 114/2024**

**PW 2 :துக்காராமன்** த/பெ.ஐயோத்திபிள்ளை

நாள் : 05.03.2026.

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**1 முதல் 4 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

எனக்கு திருமணமான 5,6 மாதத்திலேயே நாங்கள் தனி குடித்தனம் சென்று விட்டோம் என்று சொன்னால் சரியல்ல. 8 ஆண்டுங்கள் கழித்து தான் 1980ம் ஆண்டில் சென்றோம்.

பொதுவாக யார் பெயரில் சொத்து வாங்குகிறார்களா அவர் பெயரில் தான் பட்டா வழுங்கபடும் என்று சொன்னால் சரியல்ல. நான் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

ஏனென்றால் கிரையம் வாங்கியது ஏழுமலை என்றும் பட்டா அவரது தந்தை பெயரில் வழுங்கப்பட்டது சாதகமாக வைத்து கொண்டு நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. ஏழுமலை கிரையம் வாங்குவதற்கு முன்பாகவே என் தந்தை பெயரில் பட்டா வழுங்கப்பட்டது.

அவ்வாறு தான் நான் வழக்கு நடத்தி வருகிறேன் என்று சொன்னால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் புகைபடத்திலுள்ள இடம் தகராறுக்கு உட்பட்ட தாவா சொத்து என்று சொன்னால் சரிதான். அது **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பி.வா.சா.ஆ.1ல் உள்ள வரப்பு கிழக்கு மேற்காக செல்கிறது என்று சொன்னால் சரியல்ல அது வடக்கு தெற்காக செல்கிறது. நான் அவ்வாறு கூறுவதற்கு காரணம் கிழக்கு பாகம் எனக்கு ஒதுக்கப்பட்டதாகவும் மேற்கு பாகம் ஒதுக்கப்பட்டதால் தான் என்று சொன்னால் சரிதான்.

நான் வழக்கு சொத்தில் அருதி எல்லைக்கு உட்பட்டு பிரிக்க கூடிய வரப்பு ஒன்று உள்ளது என்று சொன்னால் சரிதான். நீதிமன்றம் மூலமாக ஆணையரை நியமித்து அவர் சென்று பார்த்தால் மேற்படி வரப்பு வடக்கு தெற்காக உள்ளதா அல்லது கிழக்கு மேற்காக உள்ளதா என்ற விவரம் தெரிய வரும் என்று சொன்னால் சரிதான்.

அதற்கான நடவடிக்கையை நான் எடுக்க தயாராக உள்ளேனா என்றால் எடுக்க உள்ளேன். எனது அண்ணன் 1987ல் என்னிடம் சில சொத்துக்களை வா.சா.ஆ.2 ன் படி கிரையம் பெற்றுள்ளார் என்று சொன்னால் சரிதான்.

எனக்கும் ஏழுமலைக்கும் பாகம் பிரிவிணை ஆனதுக்கான

ஆவணம் வா.சா.ஆ.2 என்று தான் என் மகன் அவரது குறுக்கு விசாரணையில் கூறியுள்ளார் என்றும் அதற்கு எனக்கு மாற்று கருத்து இல்லை என்று சொன்னால் பாகபிரிவினை ஆன பிறகு தான் என்னுடைய அண்ணன் என்னிடம் கிரையம் பெற்றார்.

வா.சா.ஆ.2 என் பாக சொத்து என்றும் மேலும் அது என் அனுபவத்தில் இருந்ததாகவோ எழுத படவில்லை என்றும் என் பிதுரார்ஜிதம் மற்றும் என் அனுபவத்தில் என்று தான் எழுதபட்டுள்ளதால் அந்த ஆவணம் எங்கள் இருவரிடையே பாகபிரிவினை நிரூபிக்க கூடிய ஆவணம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

என் அண்ணன் மகன் ராஜாராம் வட்டாட்சியருக்கு மனு கொடுத்து பட்டா தவறாக வழங்கப்பட்டதால் DRO அதனை சரி செய்து தற்போது ராஜாராமுக்கு பட்டா வழங்குப்பட்டுள்ளது என்றால் முதலில் பட்டா சரியாக தான் வழங்கப்பட்டது.

எனது தரப்பில் DRO யுடைய உத்தரவை வா.சா.ஆ.8 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான் என் வழக்கு படி DRO வின் உத்தரவு தவறு என்று கூறுகிறேன் என்று சொன்னால் சரிதான். எனது வழக்கில் மேற்படி உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்று கோரவில்லை என்றும் மேல் முறையீடு எழுவும் செய்யவில்லை என்றும் சொன்னால் சரிதான. கூட்டு பட்டாவில் இருந்து நீக்கியது தவறு என்று தான் வழக்கு தாக்கல் செய்யபட்டுள்ளது.

மேற்படி DRO வின் உத்தரவு செல்லத்தக்கது அல்ல என்று பரிகாரம் கேட்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னல் சரியல்ல.

எனது அண்ணனுக்கு திருமணம் ஆகும் போது எனக்கு 19 வயது. முதல் பிரதிவாதியுடைய திருமணத்தின் போது அவரது பெற்றோர்கள் நகைகள் நிறைய போட்டார்களா என்றால் இல்லை.

1ம் பிரதிவாதி அவரது வாக்குமூலத்தில் தனது நகைகளை விற்று சொத்துக்கள் வாங்கப்பட்டது என்று கூறியுள்ள விவரத்தை நான் மறுப்பு கூறவில்லை என்று சொன்னால் அவருக்கு நகைகளே இல்லை.

எனது அண்ணன் 8ம் வகுப்பு வரை படித்தார். அவர் தபால் துறையில் வேலை செய்தாரே தவிற உலக அனுபவம் குறைவு என்று சொன்னால் சரியல்ல. அவருக்கு உலக அனுபவம் இருந்தது. நான் பழைய 11ம் வகுப்பு படித்தேன்.

எனது அண்ணன் ஏழுமலைக்கு படிபறிவும் உலக அனுபவமும் குறைவு என்பததால் எனது பெயரில் கூட்டு பட்டா வாங்கி கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. எனது அண்ணனுக்கு எல்லாம் தெரிந்து தான் நடந்தது.

நான் எனது பிராதில் என் தந்தை இறந்த பிறகு தான் நானும் என் அண்ணனும் சேர்ந்து மனு கொடுத்து கூட்டு பட்டா பெற்றதாக கூறுகின்ற விவரமே தவறு என்று சொன்னால் சரியல்ல.

தகராறுக்கு உட்பட்ட சொத்துக்கு பட்டா எண் என்ன என்றால் 1503. அது 1503 எந்த ஆண்டில் உருவானது என்றால் 1996ம் ஆண்டு. மேற்படி சொத்தின் தற்போதைய பட்டா எண்ணும் 1503 தான்.

நான் கூறுவது தவறு என்றும் தற்போதைய பட்டா எண் 1972 என்றும் அது ஏழுமலையுடைய வாரிசுதாரர்கள் பெயரில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

நான் தனிப்பட்ட முறையில் கட்டிய வாய்தா ரசீதுகள் வா.சா.ஆ.4 எந்த பட்டா எண்ணில் கட்டியுள்ளேன் என்றால் 1503ல் தான். நான் கூறுவது தவறு என்று சொன்னால் சரியல்ல.

நான் கட்டியுள்ள தீர்வை ரசீதுகள் என் பெயரில் வழங்கப்பட்ட பட்டாவின் அடிப்படையில் ஏழுமலைக்கு தெரியாமல் கட்டியவை என்றும் அது எந்த விதத்திலும் என் வழக்கிற்கு சாதமாக அமையாது என்று சொன்னால் சரியல்ல. அனைத்தும் ஏழுமலைக்கு தெரிந்தே தான் கட்டப்பட்டது.

DRO அளித்த உத்தரவில் எனது தந்தையுடைய இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் அடிப்படையில் UDR ல் நடந்த தவறின் காரணமாக கூட்டு பட்டா வழங்கபட்டது என்று முடிவு செய்து தான் தனி பட்டா ஏழுமலையின் வாரிதாரர்கள் பெயரில் வழங்கப்பட்டது என்று சொன்னால் UDR ல் தவறே நடக்கவில்லை.

தாவா சொத்து ஏழுமலையின் தனி சொத்து என்றும் அதில் நாங்கள் உரிமை கோர முடியாது என்றும் அதனால் எங்கள் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. அது ஏழுமலையின் தனி சொத்து அல்ல. அது கூட்டு குடும்ப வருமானத்தில் பெறப்பட்டது.

நாங்கள் கோரியுள்ள எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றும் பிரதிவாதிகளின் செலவுத் தொகையுடன் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

<u>**மறு விசாரணை :**</u> இல்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.03.05 18:26:10 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.